22 மே 2022

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது**

மாதாந்திர கருப்பொருள்:

**அகில உலக குடும்ப தினம் (மே 15)**

## தூய ஆவியார் அமைதியைக் கொண்டுவருவார்

2023 ஆம் ஆண்டுக்கு நம்மை இட்டுச் செல்லும் இரண்டு ஆண்டுகால ஆயர் பேரவையில் நாம் கருத்துகளை சேகரிப்பது அல்ல; மாறாக தூய ஆவியானவரின் குரலுக்குச் செவிகொடுப்பது.

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத் தருவார்; நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்.

(யோவான்14:26)

பாஸ்கா காலத்தின் 6 ஆம் ஞாயிறைக் கொண்டாடும் இந்த நாளில், தூய ஆவியானவர் வாழ்வைக் கொடுப்பவர் என்று இன்றைய வாசகங்களில் நாம் வாசிக்கிறோம். இயேசு தம்மை பின்பற்றியவர்களை விட்டுச் செல்லும் காலம் வந்தபோது, அவர்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன் என்று சொல்லி, துணையாளரை அனுப்புவதாக உறுதியளிக்கின்றார். இன்றைய நற்செய்தியில் நாம் காணும் பகுதி, இயேசு தம் சீடர்களோடு இராவுணவு அருந்தியபின் அவரின் பிரியாவிடை உரையின் ஒரு பகுதியாகும். இயேசு அவர்களை விட்டுப் பிரியப்போகிறார் என்பதற்கான அறிகுறிகளை அவர்களுக்குக் கொடுத்துள்ளார். மேலும் சீடர்கள் தங்களின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற கவலையுடன் உள்ளனர். இயேசு அவரின் அமைதியின் ஆசீரை அவர்களுக்கு அளிக்கின்றார். “ அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது அல்ல; நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; மருள வேண்டாம்.

திருத்தூதர்களின் கட்டளையின்றி சிலர் தங்கள் போதனைகளால் நம்பிக்கையாளர்களை தவறாக திசைதிருப்பியதை நாம் முதல்வாசகத்தில் பார்க்குபோது தொடக்கக்கால திருஅவை பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. இருந்தபோதும் நம்முடைய ஆயர் மன்றம் தூய ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, போதனைகளை வழங்கவும், இறைசமூகத்திற்கு அமைதியைக் கொண்டுவரவும் முடியும். தூய ஆவியால் நமக்கு அமைதி உண்டாகிறது.

தம்மை அன்பு செய்கிறவர்களுக்கும் அவருடைய வார்த்தைகளைக் கடைப்பிடிப்பவர்களுக்கும் அவருடைய அமைதி அருளப்படுகிறது என்று இயேசு கூறுகிறார். வாழ்க்கைப் புயல்களை எதிர்கொள்ளும்போது உலகம் பொருள் சார்ந்த வசதியின் மூலம் அமைதி பெறலாமென்று நம்மை ஒரே வட்டத்தில் சுழலச் செய்கிறது. இன்று நாம் எதிகொள்ளும், உடல்நலக்குறைவு, நிதிப்பற்றாக்குறை, திருமணம், வேலைவாய்ப்பு அல்லது எல்லாவிதமான பற்றாக்குறை ஆகிய எது நம்மை துன்பத்துக்குள்ளாக்கினாலும், **இயேசுவிடம் திரும்புவோம்; அவருடைய தூய ஆவியார் நம் ஆறுதலின் ஆதாரமாக இருக்க அனுமதிப்போம்.**

இன்று நாம் ஏங்குவதும் மன்றாடுவதும் கிறிஸ்துவின் அமைதிக்காகவே. தந்தை வாக்களித்த தூய ஆவியானவரை நம் உள்ளங்களில் வரவேற்பதின் மூலம், , அவர் நம் உள்ளங்களில் தங்கிட அனுமதிப்பதன் மூலம், முடிவில் நாம் அவரின் அமைதியைக் காண்போம். அவரின் வார்த்தை நம் எண்ணங்களிலும், செயல்களிலும் செயல்படத் தொடங்க, நம் அன்னை நமக்காகப் பரிந்து பேச மன்றாடுவோம். யோவான் காட்சியில் கண்ட தந்தை, மகன் தூய ஆவியார் வாசம் செய்யும் “ புதிய எருசலேமில் நாம் சென்று வசிக்கும் நாள்வரை அன்னை நம்மை இயேசுவின் அருகில் கொண்டு சேர்ப்பாராக. ✣

**இன்றைய வாசகங்கள்:**

திப: 15: 1-2, 22-29;

திபா: 67: 2-3, 5-6, 8;

திவெ: 21: 10-14, 22-23;

யோவான்: 14: 23-29.

INTERNAL CIRCULATION ONLY

BUL 21/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org